# தமிழர் வழிபாட்டில் செவ்வேளும் திருமாலும்

அ. சண்முகதாஸ்

பண்டைத்தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது. வாழ்க்கை நடைமுறைகள் இயற்கைநிலைக்கேற்பவே அமைந்தன. தமது ஆற்றலுக்கு மேற்பட்டவற்றைத் தமிழர் உயர்ந்த நிலையில் வைத்து வழிபாடு செய்தனர். ''வழிபாடு'' என்னுஞ் சொல், வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை, வழக்கம், சமயக்கோட்பாடு எனப் பல பொருள் களைத்தரும்.[1] வாழ்க்கையிலே நாம் செல்லுகின்ற திசையினைக் காட்டுவதாக இன்று ''வழிபாடு'' கருதப்படுகின்றது. பழந்தமிழர்களது நடைமுறைகளையே இன்றும் தமிழர் பெரும்பான்மையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். வழிபாட்டுநிலையும் அத்தகையதே. பழந்தமிழ் இலக்கியங்கள் பழைய வழிபாட்டு நடைமுறைகளைத் தெளிவுறப் பதிவுசெய்து வைத்துள்ளன. அவ்விலக்கியச் செய்திகள் எமது இன்றைய வழிபாட்டு நடைமுறைகளை நாம் விளங்கிக் கொள்ளவும் நல்லுதவி புரிகின்றன.

சங்க இலக்கியத் தொகுப்பு நூலினுள் ஒன்றான பரிபாடல் தமிழர் வழிபாடு பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. அந்நூல் தொகுப்புநூலாக இன்றிருப்பதால் ஆய்வுக்குரியதாகவும் உள்ளது. ''பரிபாட்டமுதம்'' எனச் சான்றோராற் புகழப்பட்ட பரிபாடல் தொகைநூல் எட்டுடன் ஐந்தாவதாக நின்று விளங்கியதை,

''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத்தொகை''

என்னும் வெண்பாவால் அறியக்கிடக்கின்றது. இவ்வெண்பாவிலே ''ஓங்கு பரிபாடல்'' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பரிபாடலைப்பற்றி பழந்தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் பின்வருமாறு கூறியுள்ளார்.

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்''[2]

உலகியல் வழக்கினைப் பாடுவதற்குப் பரிபாட்டு தகுதி பெற்றிருந்தமையையே இச்சூத்திரம் காட்டுகின்றது. தொல்காப்பியர் செய்யுளியலிலே[3] பரிபாட்டின் தன்மைகளை மேலும் விரிவாகக் கூறியுள்ளார். காமப் பொருள் பற்றியே வரும் பாட்டு எனவும் குறிப்பிட்டுள்ளார். இப் பொருள் மயக்கத்தை உரையாசிரியர் பொ. வே. சோமசுந்தரன் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்.

''ஆசிரியனார் தொல்காப்பியனார் காலத்தே அவர்க்கு இலக்கியமாக இருந்த பரிபாடல் முழுவதும் காமப்பொருள் பற்றியே எழுந்தன என்பது, அவர் பொருள் உரிமை கூறுமிடத்துக் காமம் ஒன்றனையே விதந்தெடுத்தோதுதலால் உணரலாம். இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பரிபாடலிற் பெரும்பகுதி கடவுள் வாழ்த்து என்னும் புறத்துறை பற்றிய பாடல்களேயாதல் காணலாம். இக்கடவுள் வாழ்த்துப் பரிபாடலுக்குப் புறநடையாகவேனும் தொல்காப்பியராலே கூறப்பட்டிலது. ஆனால் உரையாசிரியர்கள் இக்கடவுள் வாழ்த்து பரிபாடற்கண் வருதலை இலேசானே தழுவுகின்றனர்.[4]

பரிபாடல் தொகைபற்றிக் கூறுமிடத்து எழுபது எனக் கொள்வதற்குண்டு. இதனை,

''திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட்கு ஒன்று - மருவினிய
வையைஇரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடல் திறம்.''

என்னும் வெண்பா கூறுகின்றது. இறையனார் களவியலின் முதற் சூத்திர உரையாலும்[5], தொல்காப்பியம் செய்யுளியல் 149 ஆம் சூத்திரத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையாலும்[6] எழுபது பரிபாடல்கள் இருந்தமை உணரப்படுகின்றது. ஆனால் இன்றெமக்கு இருபத்திரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. அவற்றிலே திருமால் பற்றியன ஆறு. செவ்வேள் பற்றியன எட்டு. மீதி வையை நதியைப் பற்றியனவாகும்.

தொல்காப்பியர் காலத்தில் இருந்த பாடல்கள் அகப்பொருளைப் பற்றியனவாக எழுந்ததெனக் கொள்வதற்கு இடமுண்டு. பிற்காலத்தே அவை கடவுள் வாழ்த்துப் பாடல்களாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் காமம் ஒன்றேபற்றி வரும் எனத் தொல்காப்பியராலே கூறப்பட்ட பரிபாடல் பிற்காலத்திலே கடவுள் பற்றியும் பாடுதற்கு எடுத்தாளப்பட்டிருக்கலாம். ''வாழ்க்கை இன்பம்'' என்ற நிலையில் மட்டுமன்றி ''வழிபாடு'' என்ற நிலையிலும் நடைமுறைகள் தோன்றியபோது பரிபாட்டும் பெரிதும் பயன்பட்டதெனலாம். மக்கள் வாழ்க்கைபற்றிய செய்திகளைக் கூறுகின்ற சங்கச் செய்யுட்களிலே பரிபாடல் வேறுபட்டு நிற்கிறது; அக்காலத்து மக்களின் வழிபாடுபற்றிய சிந்தனைகளைக் காட்டுகிறது; மக்கள் வாழ்வும் வழிபாடும் ஒன்றிணைந்திருந்தமையை மிகத் தெளிவாக விளக்குகிறது. எனவே பரிபாடல் இறையியல்பு உணர்த்துகின்ற தமிழ்நூலாகின்றது. பரிபாடல் தோன்றிய காலத்தில் தமிழ்மக்களிடையே வழிபாடு பற்றிய சிந்தனை வளர்ந்திருக்க வேண்டும். வழிபாட்டு நடைமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். செவ்வேள், திருமால் என இரண்டு கடவுளர்பற்றிய எண்ணங்கள் மக்களிடையே நிலைபெற்றிருந்திருக்கவேண்டும்.

பரிபாடலில் அமைந்துள்ள திருமால் பற்றிய பாடல்களும் செவ்வேள் பற்றிய பாடல்களும் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றன. அப்பாடல்களை நுணுகி ஆராயுமிடத்துப் பலசான்றுகளைப் பெறமுடிகின்றது.

பாடல்கள் கூறும் பொருள் மக்களின் வழிபாட்டு நடைமுறைகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு செவ்வேள், திருமால் பற்றிய பாடல்களின் பண்புகள் மட்டுமே எடுத்து விளக்கப்படுகின்றன.

### பாடல்களின் பண்பு:

பரிபாடல் தொகுப்புநூலிலே திருமாலின் பாடல்கள் நான்கு முதல் நிலைகளாக அமைந்துள்ளன. அதிலும் முதற்பாடல் நூலின் கடவுள் வாழ்த்து என்றே குறிக்கப்பட்டுள்ளது. 13ஆம், 15ஆம் பாடல்களும் திருமால் பற்றியனவாக அமைந்துள்ளன. முறையே 5,8,9,14,17,18,19 என அமைந்த பாடல்கள் செவ்வேள் பற்றிய கருத்துக்களைத் தருகின்றன. திருமால்பற்றிய பாடல்களை இளம்பெருவழுதியார், கடுவன் இளம்வெயினனார், கீராந்தையார், நல்லெழினியார் என்னும் நான்கு புலவர்களும் பாடியுள்ளனர். இவர்களுள் இளம்பெருவழுதியாரது பாடல் புறநானூற்றிலும்[7] அமைந்துள்ளது. கீரந்தையார் பாடிய செய்யுள் ஒன்று திருவள்ளுவமாலையிற்[8] காணப்படுகின்றது. பரிபாடலில் கடவுள் வாழ்த்தாக அமைந்த செய்யுளைப் பாடியவரை யாரென அறியமுடியவில்லை. ஏனைய பாடல்களின்கீழே பாடியவர்களது பெயர்களும் இசை வகுத்தவர்களது பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

செவ்வேள் பற்றிய எட்டுப்பாடல்களையும் முறையே கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார், குன்றம்பூதனார், கேசவனார், நல்லழிசியார், நப்பண்ணனார், நல்லச்சுதனார் ஆகியோர் பாடியுள்ளனர். இவர்களுள் குன்றம்பூதனார் இரண்டுபாடல்களைப் பாடியுள்ளார். பாடல்களின் தொகை மிகக் குறைவாக இருந்தபோதும் கூறும்பொருள் விரிந்ததாகவுள்ளது. தனித்தனியாக அப்பாடல்கள் கூறும் விடயங்களை நோக்கவேண்டியுள்ளது.

### திருமால் பற்றிய பாடல்கள்:

திருமால் பற்றிய ஆறு பாடல்களும் மக்களிடையே அக்காலத்து நிலவிய கடவுட்கோட்பாட்டை அறியப் பெரிதும் உதவுகின்றன. கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடலில் திருமால் பற்றிக் கூறப்படும் கருத்துக்கள் உருவவழிபாட்டு நிலை மக்களிடையே இருந்ததை உணர்த்துகின்றது. திருமாலுக்கென வடிவம் ஒன்று மக்கள் மனதிலே இடம்பெறறிருந்தது. அவ்வடிவு பற்றிய அறிவு எவ்வாறு மக்களிடையே ஏற்பட்டிருந்தது என்பதையும்,

> "எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை
> சேவலங் கொடியோய்நின் வலவயி னிறுத்து
> மேவலுட் பணிந்தமை கூறும்
> நாவல் அந்தணர் அருமறைப் பொருளே"[9]

என்னும் அடிகள் தெளிவுறுத்துகின்றன. நாவன்மையையுடைய அந்தணர்களால் வேதங்களிலே கூறப்பட்டுள்ள வழிபாட்டு நடைமுறைகள் மக்களுக்கு உணர்த்தப் பட்டுள்ளன. வேதங்களிலே கூறப்பட்டுள்ள கடவுளர்களது உருவத்தோற்றங்களை மக்கள் அறிந்திருந்தனர். புராணங்களிலே

விரித்துரைக்கப்பட்டிருந்த கடவுளர்களின் ஆற்றலையுணர்த்தும் செய்திகள் பரிபாடலிலும் கூறப்பட்டுள்ளன. இயற்கையின் ஆற்றலே கடவுள் என்று கருதியிருந்த நிலைமை மாறிவிட்டது. கடவுள்பற்றிய சிந்தனை மேலும் விரிவடைந்திருந்தது. ''திருமால்'' என்னும் பெயர் அடக்கிய பண்புகளை பின்வரும் அடிகள் விளக்கும்.

''விறன்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க் களியு நீ
திறனிலோர்த் திருத்திய தீதுதீர் சிறப்பின்
மறனும் மாற்றலர்க் கணங்கு நீ
அங்கணேர் வானத் தணிநிலாத் திகழ்தரும்
திங்களுந் தெறுகதிர்க் கனலியு நீ
ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை யொருவனு மடங்கலு நீ
நலமுழு தளைஇய புகரறு காட்சிப்
புலமும் பூவனு நாற்றமு நீ
வலனுயர் எழிலி மாக விசும்பும்
நிலனு நீடிய இமயமு நீ''[10]

வழிபாடு பற்றிய சிந்தனையிலே இயற்கையும் பிறகருத்துக்களும் ஒன்றிணையும் நிலையினை இங்கே காண முடிகின்றது. அந்தணர்கள் வேதங்கூறும் நிலையிலே வழிபாட்டு நடைமுறைகளைச் சமூகத்தவரிடையே பரப்பினர். ஆனால் அக்கருத்துக்களோடு இயற்கையையே இறைஉருவாக மக்கள் கண்டமையும் உணரப்படுகின்றது. திங்களும் ஞாயிறும் வணக்கத்தில் இடம் பெற்றுள்ளன. வேதநூலார் கூறும் அறமும், அளியும், மறனும், அணங்கும், திங்களும், ஞாயிறும், அரனும், அயனும் அவர்செய் தொழிலும், விசும்பு முதலிய பூதமும் பிறவுமாகிய எல்லாப் பொருள்களும் திருமாலே என்ற கருத்து பரிபாடலில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினைப் பின்வந்த இலக்கியங்களிலும் காணமுடிகின்றது.

''திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்.''[11]

மக்களது வாழ்க்கை நடைமுறைகளில் வழிபாடு முக்கிய இடம்பெற்ற போது சமயங்கள் உருவாகத் தொடங்கின. ''சமயம்'' என்ற சொல் காலம், தருணம், அவகாசம், மதம், நூல், உடன்படிக்கை, மரபு எனப் பல பொருள்களைத் தருவது.[12] மக்களது வாழ்விலும் ஏற்பட்ட மாற்றங்களைச் சமூகத்திலே தோன்றி வளர்ந்துள்ள சமயங்கள் நன்குணர்த்துகின்றன. காலத்தின் போக்கிற்கு இணங்க மக்கள் சமயங்களை நடைமுறைப் படுத்தி வாழ்ந்து வந்துள்ளனர். தமிழ்மக்களது வாழ்க்கையிலும் பல்வேறு சமயநெறிமுறைகள் நடைமுறையிலே இருந்தன. பரிபாடல் இந்நிலைப்பட்ட நடைமுறைகளை நன்கு விளக்குகிறது.

திருமாலும் செவ்வேளும் தமிழ்மக்களின் வாழ்க்கையில் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றிருந்தனர் என்பதைப் பரிபாடலிலுள்ள 14 பாடல்கள்

விளக்குகின்றன. இரு கடவுள்களது உருவங்களும் வர்ணிக்கப்பட்டுள்ளன. தோற்றத்திலும் ஆற்றலிலும் வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. திருமால் உலகத்தின் தோற்றத்துடன் தொடர்புகொண்ட தெய்வமாக மக்கள் மனதிலே இடம்பெறுகிறுர். பரம்பொருளினின்றும் ஆகாயந்தோன்றி அதனினின்றும் காற்றுத்தோன்றி, அதனினின்றும் தீத்தோன்றி, அதனினின்றும் நீர்தோன்றி, அதனினின்றும் நிலந்தோன்றிற்று என வேதங்களிலே கூறப்பட்டுள்ள கடவுட்கோட்பாடு பரிபாடலில் திருமால்பற்றிய பாடலிலே இணைக்கப்பட்டுள்ளது. வேதம்பற்றிய அறிவு சமூகத்திலே அக்காலத்தில் நிலைபெற்றிருந்தமைக்கும் பாடற்சான்று காணப்படுகின்றது.

''செவ்வாய உவணத் துயர்கொடி யோயே
கேள்வியுட் கிளந்த ஆசான் உரையும்
படிநிலை வேள்வியுள் பற்றியொடு கொளலும்
புகழ்இயைந் திசைமறை உறுகனல் முறைமூட்டித்
திகழொளி ஒண்சுடர் வளப்பாடு கொளலும்
நின்உரு புடன்உண்டி
பிறர்உடம் படுவாரா
நின்னொடு புரைய
அந்தணர் காணும் வரவு''[13]

என்னும் அடிகளிலே வேள்விபற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. தமிழர் மத்தியிலே மிருகங்களை அறுத்து வழிபாடு செய்கின்றமை முன்னரே நடைமுறையில் இருந்துள்ளது.

''நன்னுதற் பசந்த படர்மலி அருநோய்
அணங்கென உணரக் கூறி வேலன்
இன்னியங் கறங்கப் பாடிப்
பன்மலர் சிதறியர் பரவுறு பலிக்கே''[13]

என நற்றிணைப் பாடலடிகள் கூறும் வழிபாட்டு நடைமுறை நோய்தீரும்படி செய்யப்பட்டது. படிமத்தான் (பூசாரி) தனது துடி முதலிய வாச்சியம் ஒலிக்கப் பாடி பலவாய பூக்களைத் தூவித் துதித்து இவ்வாட்டினை ஏற்றுக் கொள் என்று அதனை அறுத்துக் கொடுக்கும் பலிக்காக நோய் தணியும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் இருந்தமை இதனுல் உணரப்படுகின்றது. இது சாதாரண மக்கள் மத்தியிலே வழக்கிலிருந்த வழிபாட்டு நடைமுறையாகும். ஆனுல் பரிபாடலிலே கூறப்படுகின்ற வேள்விமுறை இதன் வளர்ச்சிநிலையாகவும் ஆரியவயப்பட்ட முறையாகவும் காணப்படுகின்றது.

கேள்வி நிலையிலே சமூகத்திலே திருமால் பற்றிய புதிய கருத்துக்கள் மக்கள் மத்தியிலே பரவியமைக்குப் பரிபாடலிலே சான்றுண்டு. திருமாலின் ஆற்றலும் சிறப்பும் முனிவர்மூலம் அறியப்பட்டதாக மூன்றும் பாடலிற் குறிப்புண்டு.

''ஞாலத் துறையுள் தேவரும் வானத்து
நாலெண் தேவரும் நயந்துநிற் பாடுவார்
பாடும் வகையேயெம் பாடல்தாம்''[14]

ஆரியவயப்பட்ட வழிபாட்டுச் சிந்தனைகள் தமிழ்மக்கள் மத்தியிலே நன்கு பரவியதால் திருமால் முழுமுதற்கடவுள், பரம்பொருள் என்ற நிலையும் உருவாகியது. சாமவேதத்திலே கூறப்படுகின்ற செங்கண்மால் தமிழர்களது வழிபாட்டிற்குரிய தெய்வமானதைப் பரிபாடல் தெளிவாக விளக்குகிறது. புருடதத்துவம், ஐம்பூதங்கள், கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், ஐம்புலன்கள், அந்தக்கரணங்கள் எனப்பல்வேறு தத்துவ எண்ணங்கள் பற்றித் தமிழர் அறிந்திருந்த நிலையும் இதனால் உணரப்படுகின்றது.

எனினும் இயற்கைச் சக்திகளிலே மனிதன் கண்டிருந்த கடவுள் நிலையையும் திருமாலின் பண்பாக இணைத்து நோக்கியமையும் கடுவனிளவெயினனரது பாடலில் வெளிப்பட்டுள்ளது. இயற்கையின் பண்புகள் திருமாலது உருவாக எண்ணப்பட்டன.

> ''நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றின்கண் காணப்படுகின்றன. நின் தண்மையும் மென்மையும் திங்களிடத்தே உள்ளன. நின் சுரத்தலும் வண்மையும் முகிலிடத்துள்ளன. நின் காவலும் பொறுமையும் நிலத்தின்கண் உள்ளன. நின் மணமும் ஒளியும் காயாம் பூவிடத்தே காணப்படுகின்றன. நின் தோற்றமும் அகலமும் கடலிடத்தே காணப்படுகின்றன. நின் உருவமும் ஒலியும் விசும்பின்கண் உள்ளன. நின் வரவும் ஒடுக்கமும் காற்றின்கண் உள்ளன. இவையும் இன்னோரன்ன பிறவும் நின்னின்றும் பிரிந்து நின்னையே தழுவி நின் காவற்கண் அமைந்துள்ளன.''[15]

மேற்காணும் பகுதி இதனை விளக்குகின்றது.

திருமாலின் தோற்றப்பொலிவும் ஆற்றலும் பரிபாடலில் விரிவாகவே கூறப்பட்டுள்ளன. நற்றிணை, புறநானூறு, மதுரைக்காஞ்சி என்னும் நூல்களில் மாயோன் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அக்குறிப்புக்கள் திருமால் என்ற பெயரிற் கூறப்படாமல் 'மாயோன்' என்ற பெயரிலேயே கூறப்படுகின்றன. நற்றிணையில்[16] மாயோன் கண்ணனாய் அவதரித்த செய்தி தலைவனை உவமிப்பதற்காக எடுத்தாளப்பட்டுள்ளது.

> ''மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
> வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி
> அம்மலை கிழவோன்......''

தலைவியிடம் தலைவனைப்பற்றிக் கூறும் தோழி, அவனை மாயோனைப் போன்ற பெரிய மலைப்பக்கத்து அவன் கண்ணனாயவதரித்த பொழுது அவனுக்கு முன்னவனாகத் தோன்றிய வெளிய நிறத்தையுடைய பலதேவனைப்போன்று விளங்கிய வெண்மையான அருவிகளையுடைய அழகிய மலைக்குரிய தலைவன் என்று குறிப்பிடுகிறாள்.

புறநானூற்றில்[17] பாண்டியன் நன்மாறனைப் புலவன் காரிக்கண்ணனார் பாடும்பொழுது ''மாயோனன்ன உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற'' என்று விளித்துள்ளார். புறநானூறு பாடல் 291 ''மாயோன்'' என்னும் சொல் மறக்குடிவீரனைக் குறித்ததை உணர்த்துகின்றது.

தூவெள்ளறுவை மாயோற்குறுகி
இரும்புட்பூச லோம்புமின்........''[18]

என்னும் அடிகளில் 'மாயோன்' என்ற சொல் தூய வெள்ளிய ஆடை அணிந்த கரிய நிறமுடைய போர்வீரனைக் குறிக்கின்றது. இதேபோன்று கரிய நிறமுடைய பெண் 'மாயோள்' எனச் சங்கப் பாடல்களிற் குறிப்பிடப் பட்டுள்ளாள். எனவே கரிய நிறம் திருமாலின் தோற்றமென மக்களிடையே உணரப்பட்டுள்ளமை பெறப்படுகின்றது.

மதுரைக்காஞ்சியில் மாயோனது பிறந்தநாளைப் பற்றிய குறிப்பொன்றுண்டு.

"கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாட்......''[19]

என்னும் அடிகளில் அவுணர்களைக் கொன்றருளிய பொன்னாற் செய்த மாலையினையுடைய திருமால் உலகிற் பிறந்த நல்லநாள் திருவோணமாகிய நன்னாளெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமால் பற்றிய பல்வேறு செய்திகளையும் தொகுத்துக் கூறவே பரிபாடற் பாக்கள் தோன்றியிருக்க வேண்டும். இக் கருத்தை மாயோன் பற்றிய முன்னைய பாடற்செய்திகளால் உறுதி செய்ய முடிகின்றது.

பரிபாடற்பாக்களில் திருமாலுக்குப் பனை, கலப்பை, யானை, கருடன் போன்ற பல கொடிகள் கூறப்பட்டுள்ளன. ஆழிப்படையும் சங்கும் கைகளில் தாங்கியவனாகவும், சிவந்த கண்ணினையுடையவனாகவும், துளசிமாலையை அணிந்தவனாகவும், நீலமணிபோன்ற மேனியையுடையவனாகவும், திருமகளின் கணவனாகவும், பல்வேறு திருநாமங்கள் கொண்டவனாகவும் அவன் விபரிக்கப்பட்டுள்ளான். இதனாற் பிற்காலத்தில் மக்கள் மனதிலே திருமால் மனிதனுக்கு உவமையாகக் கூறமுடியாதபடி ஒப்பற்ற தெய்வமெனும் கருத்து ஊன்றிப் பதிய இடமுண்டாயிற்று. அதுவே வைணவ மதத்தின் தோற்றத்திற்கும் வித்திட்டதென்று கூறினும் நன்று.

பரிபாடல் 15 ஆம் பாடல் திருமாலிருஞ்சோலை பற்றி வர்ணிக்கின்றது. மக்கள் மனதிலே வழிபாடு செய்யப்படும் இடத்தைப் பற்றிய கருத்து ஏற்பட்டிருந்ததை இது விளக்குகின்றது. கடவுளை அறிய மட்டுமல்லாமல் அடையவும் வழிபாடு அவசியம். தெய்வங்கள் மலையிலே உறைகின்றன என்னும் நம்பிக்கை மக்களிடையே வலுப்பெற்றிருந்தது. எனவே மலையை வணங்கும் வழக்கமும் இருந்தது. மலையின் தோற்றம் திருமாலின் தோற்றமாகக் கொள்ளப்பட்டது.

"அறிவெல்லையால் அறியப்படாத புகழுடனே பொலிந்து நிலத்தைத் தாங்கும் சக்கரவாள முதலாகத் தொல்லிசைப் புலவர்கள் ஆராய்ந்துரைத்த மலைகள் பற்பல உள்ளன. அப் பலவற்றுள்ளும் பசி வெம்மையாற்றி நிறைந்த பயன் பலவும் தரும் மலைகள் சிலவேயாம். அவற்றுள்ளும் தெய்வங்கள் விரும்பும் மலைகள் ஒருசிலவே உள்ளன. அவற்றுள்ளும் மாயோனையும் பலதேவனையும் தாங்கும் திருமாலிருங்குன்றம் சிறந்ததாகும்.''[20]

மேற்கூறப்பட்ட கருத்து இயற்கையின் தோற்றத்திலேயே இறைவன் இணைவதை மக்கள் உணர்ந்திருந்ததைக் காட்டுகின்றது. திருமாலிருங் குன்றத்தை மனைவியரோடும், இருமுதுகுரவரோடும், குழவிகளோடும், சுற் றத்தாரோடும் கூடித் தெய்வமாக மதித்து வழிபாடு செய்தனர். சுனைக ளெல்லாம் நீலமலர் மலர்தலானும் அச்சுனையைச் சூழ அசோகும் வேங் கையும் மலர்தலானும் அம்மலை மாயோனை ஒத்து விளங்காநிற்கும். வாய் மொழியாகிய வேதம் திருமால் பெருமையை உரைத்தது. அதனைத் தமி ழரும் தமது கடவுட் கோட்பாடுகளுடன் சேர்த்துக் கொண்டனர். இயற்கை நிலையான வழிபாட்டு முறைகளுடன் வேதம் கூறும் வழிபாட்டு முறைகளும் நடைமுறைகளானதையே பரிபாடல் உணர்த்துகின்றது. தமிழர் வாழ்வில் திருமால் ஒப்பற்ற தெய்வமாகினர். இயற்கைத் தோற்றத்தின் மட்டு மன்றி மனதிலே திருமாலின் கடவுள் தோற்றம் நிலைபெறத் தொடங்கியது.

## செவ்வேள் பற்றிய பாடல்கள்:

பரிபாடலில் எட்டுப் பாடல்கள் செவ்வேள் பற்றியவை. எழுவர் இப்பாடல்களைப் பாடியுள்ளனர். தமிழர் மத்தியிலிருந்த வழிபாட்டு நடை முறைகளின் இன்னொரு வளர்ச்சி முறையை இப்பாடல்களிற் காணலாம். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற தொகை நூல்களிலே கூறப்பட்ட முருகவழிபாட்டின் வளர்ச்சி நிலையை செவ்வேள்பற்றிய பாடல்கள் கூறுகின்றன. மலையுறை தெய்வமாகவும் பெண்களுக்கு நோய்தருபவனாகவும், வள்ளியோடு இணைந்தவனாகவும் முருகன் கருதப்பட்டான். அவனுக்கென வழிபாட்டிடம் முருகன் கோட் டம்[21] என அழைக்கப்பட்டது.

> "முருகயர்ந் துவந்த முதுவாய் வேலன்
> சினவ லோம்புமதி வினவுவ துடையேன்
> பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
> சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி
> வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
> விண்டோய் மாமலைச் சிலம்பன்
> ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே."[22]

என்னும் குறுந்தொகைப்பாடல் முருகவழிபாட்டு நடைமுறையைக் கூறு கின்றது. வழிமுறையாக முருகனை வழிபடுபவர்கள் பல்வேறுபட்ட நிறத்தையுடைய சில சோற்றுப் பலியுடனே இளைய ஆட்டினையும் கொன்று அதன் குருதியையும் பலியாக்கினர். இந்நடைமுறை பல பாடல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் முருகனின் அழகு காதலனின் அழகிற்கு உவமிக்கப்பட்டுள்ளது.[23] முருகனையும் சாதாரண மனிதனையும் அணியும் மாலைகளால் வேறுபடுத்திக் கூறினர்.[24]

"முருகு புணர்ந்து இயன்றவள்ளி"[25]

என்னும் தொடர் முருகனின் மனைவியாக வள்ளி அமைந்ததைக் குறித்து நிற்கின்றது. எனவே தமிழ் மக்களிடையே முருக வழிபாட்டில் ஏற்பட்ட புதிய மாற்றங்களை எடுத்துக்கூறப் பரிபாடல் பாடல்கள் எழுந்திருக்கலாம்.

இக் கருத்தை உறுதி செய்வதற்குச் செவ்வேள் பற்றிய பாடல்களே பெரி தும் உதவுகின்றன. பரிபாடல் 5 ஆம் பாடல் செவ்வேள் பற்றிய பாடல் களின் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. ''செவ்வேள்'' என்ற பெய ரும் அங்கு குறிப்பிடப்படுகிறது. ''காஅய்கடவுள் சேஎய் செவ்வேள்'' ஆக முருகன் அறிமுகஞ் செய்யப்படுகின்றான். ஆறுமுகங்களும் பன்னிரு தோள்களும் அவன் உருவில் இணைக்கப்படுகின்றன.

''நான்முகனுகிய பாகன் செலுத்தாநிற்ப வேதமாகிய குதிரைகள் பூட்டப்பட்ட நிலமாகிய தேரை ஏறிச்சென்று அரவு நாணுகவும் மலை வில்லாகவும் கொண்டு திரிபுரங்களை ஒரு நெருப்புக் கணையாலே அழியும்படி எய்தவனும் தேவர்களுடைய வேள்வியுணவினை உண்டவனும் ஆகிய இறைவன் இறைவியைக் கூடி இன்புறும்பொழுது உண்டான கருவை இந்திரன் தன்பால் வேண்டிக் கொண்டமையாலே அவ்விறை வனே பலவாகச் சோதித்தருளினன். அக்கருவை முனிவர்கள் எழுவரும் பெற்று வேள்வித் தீயிலிட்டனர். பின்னர் அதனைக் கார்த்திகை மகளிர் அறுவரும் உண்டு சரவணப் பொய்கையின்கண் தாமரைப்பூவாகிய பாயலில் நின்னை ஈன்றனர்.''[25]

என முருகன் உருவாகிய கதையும் பரிபாடலில் கூறப்படுகின்றது. கோழி யும், மயிலும் முருகனுடன் சேர்கின்றன. பன்னிரண்டு கரங்களுக்கும், முறையே மறியும், மயிலும், சேவலும், வில்லும், மரனும், வாளும், ஈட்டி யும், கோடரியும், மழுவும், கனலியும், மாலேயும், மணியும் கூறப்பட்டுள் ளன. சூரபன்மனை மாமரமானபோது வேரோடு வெட்டி நாவலந்தீவினுள் வடபகுதியிலுள்ள கிரௌஞ்சம் என்னும் மலையை உடைத்து அதன் ஊடே வழியுண்டாக்கியமை செவ்வேளின் பேராற்றலை விளக்கும் நிகழ்ச்சிகளாகக் கூறப்பட்டுள்ளன.

செவ்வேள் திருவடியை அடைய முடியாதவர்களாக உயிர்களை வருத் தும் தீயநெஞ்சினை உடையோரும், அறத்தின்கட் சேராத புகழில்லாரும், கூடாவொழுக்கமுடைய பொய்த் தவவேடமுடையோரும், மறுபிறப்பு, துறக்கம், நரகம், வீடு முதலியன இல்லை என்னும் அறிவில்லாதோரும் குறிப் பிடப்பட்டுள்ளனர். அறவோரும் மாதவரால் வணங்கப்படும் மாண்புடை யாரும் செவ்வேள் தாள்நிழலை எய்தும் பேறு பெற்றவராகக் கருதப்பட்ட னர். வழிபாட்டின் பயன் எது என்பதும் வெகு நுணுக்கமாகக் கூறப்படு கின்றது.

''பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே.''[27]

சாதாரண வாழ்வு நிலைக்கான வசதிகளை வேண்டிய வழிபாடாக அன்றி சமூக நிலைப்பாட்டிற்கான தன்மைகளை வேண்டுகின்ற வழிபாடாகச் செவ் வேள் வழிபாடு மாற்றமடைந்ததை இவ்வடிகள் விளக்குகின்றன.

திருப்பரங்குன்றம் செவ்வேள் உறையும் சிறப்பிடமாகக் கூறப்படுகின் றது. சாதாரண குன்றம் என்றமையாது புராணச் செய்திகளோடு சிறப்

பிக்கப்படுகின்றது. திருமாலும், சிவபெருமானும், பிரமனும், ஆதித்தர் பன்னிருவரும், அசுவனி மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், ஏனைத் தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும் செவ்வேளைக் காண மண்ணுலகில் அமைந்த குன்றமென விளக்கப்பட்டுள்ளது. வழிபாட்டுநிலையிலே ஏற்பட்டிருந்த மாற்றத்தை,

> ''நனிமலர்ப் பெருவழிச்
> சிறடியவர் சாறுகொள வெழுந்து
> வேறுபடு சாந்தமும் விறுபடு புகையும்
> ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்
> நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்
> மணியுங் கயிறு மயிலுங் குடாரியும்
> பிணிமுக முளப்பப் பிறவு மேந்தி
> அருவரைச் சோராத் தொடுநர்''28

என்னும் அடிகள் நன்கு விளக்குகின்றன. ஆனால் மிக்க மலரினையுடையதாய்த் திருப்பரங்குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையேயுள்ள பெரியவழியின்கண்ணே சிறந்த இறையன்புடையார் அக்குன்றத்தின்கண் உறையும் முருகவேளுக்கு விழாச்செய்ய எழுந்து நிறத்தானும் மணத்தானும் ஒன்றிற்கொன்று மாறுபடுகின்ற பல்வேறு சாந்தங்களும், பெருமையுடைய புகைப் பொருள்களும், இயங்குகின்ற காற்றாலே அவியாத விளக்கிற்கு வேண்டுவனவும், மணம்கமழாநின்ற மலர்களும், இசையை எடுத்துக்காட்டும் முழவும், மணியும், கயிறும், மயிலும், கோடரியும், பிணிமுகம் என்னும் யானை ஊர்தியும் ஆகிய இவற்றையும் இன்னோரன்ன முருகவேளுக்குகந்த பிற பொருள்களையும் ஏந்திக் கொண்டு சென்று செவ்வேளை வணங்கும் மக்கள் தமது நடைமுறை வாழ்வுக்கானவற்றையே வேண்டுகின்றனர். தாம் விரும்பும் காதலரையே கணவராகப் பெறவும், குழந்தைப் பேற்றைப் பெறவும், கணவர் பெரும் பொருள் பெறவும், போரிடச் சென்றவர் போரில் வெற்றி பெறவும் வழிபாட்டைச் செய்கின்றனர்.

திருப்பரங்குன்றத்தின் சிறப்பை ஆறு பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இயற்கையான வாழ்க்கையின் நடைமுறைகளும் வழிபாட்டுமுறைகளும் விபரிக்கப்பட்டுள்ளன. அகவாழ்வின் இருநிலைகளாகிய கற்புநிலையும் களவு நிலையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. வள்ளி, தேவசேனை பற்றிய குறிப்புகளால் இதனை நன்குணரமுடிகின்றது. மக்கள் வாழ்க்கை நிலையைச் செம்மைப்படுத்தவே வழிபாட்டு நடைமுறைகள் தோன்றின. பரத்தையரை நாடும் ஆண்களின் ஒழுக்கத்தை நியாயப்படுத்தும் வகையில் செவ்வேளுக்கு வள்ளி, தேவசேனை என இருமனைவியரை உரிமையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மக்கள் அகவாழ்வில் பேரிடம் பெற்றிருந்த ''ஊடல்'' பற்றிய வர்ணனை இதனால் அதிகமாக இணைக்கப்பட்டுள்ளது. ஊடல் தீர்க்கின்ற இடமாகத் திருப்பரங்குன்றம் பேசப்படுகின்றது.

''ஒரு கானவன் ஒள்ளிய நிறத்தினையுடைய மணிபோன்ற புள்ளியினையுடையதாய் ஆடாநின்றதொரு மயிலை நோக்கி அதன் அழகையும் களிப்பினையும் தன் உள்ளத்தால் குறிக்கொண்டு கருதி நின்றானாக அங்ஙனம் நின்றவனை அவன் காதலியாகிய அழகிய நெற்றியினையுடைய

> கொடிச்சியும் கண்டாள். அங்ஙனம் கண்டவள் அவனை நோக்கி, ஏடா நீ இப்பொழுது நின் உள்ளத்தே நினைப்பதனை யாம் அறிந்துகொண்டோம். அஃதியாதெனின் நீ இம்மயில் இவளினும் எழிலிற் சிறந்தது என்று நினைக்குமாற்றால் எம்மை இகழ்வதேயாம். ஏடா அதனை மறைத்தல் ஒழிக; இனி அதனை எமக்குச்சொல் என்று ஊடினாள். அங்ஙனம் ஊடியவளை, அக்கானவன் அதனை மாற்றிக் காதலுடையோயே தன்னால் களவுகொள்ள அரிதாகிய நினது சாயலைத் தனது களிப்பு மகிழ்ச்சியாலே களவுகொள்ள எண்ணி அஃதியலாமையாற் பெரிதும் வருந்தும் இம்மயிலினைக் கண்டு நினது சாயலின் அருமையை நினைத்து நின்றேனாக நீ அஃதறியாது எம்மை இகழ்ந்தோமாகக் கருதுகின்றனை என்று கூறி அவ்வூடலை அப்பொழுதே உணர்ப்பித்தல் கண்டோர் நன்றென்று ஆராய்தற்குக் காரணமான தேரினையுடைய முருகவேளினது இத்திருப்பரங்குன்றத்தின் இயல்பு இத்தகையது ஆகும்.''[29]

வழிபாட்டுத் தலமான திருப்பரங்குன்றம் அகவாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கூறப்படுவதற்கு முக்கிய காரணம் பழைய வழிபாட்டு நடைமுறைகளே எனலாம். அகப்பாடல்களிலே தலைவியின் நோய்தீரக் குன்றிலுறை தெய்வத்திற்கு மடை போடப்பட்டதாகக் குறிப்புண்டு. இவ்வழக்கத்தால் குன்று மக்கள் மனதிலே முக்கிய தெய்வம் உறை இடமாக இருந்ததையும் உணரலாம். இதுவே பரிபாடலிலும் வலியுறுத்தப்படுகின்றது. செவ்வேளின் ஆற்றல் சிறப்புகளைக் காட்டிலும் திருப்பரங்குன்றத்து வழிபாட்டு முறைகளுக்கும், அது சம்பந்தமான நம்பிக்கைகளுக்குமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாளாந்த வாழ்வுத் தேவைகளுக்காக வழிபாடுகள் செய்யப்பட்டதைச் செவ்வேள் பற்றிய எல்லாப் பாடல்களுமே ஆழமாக உணர்த்தியுள்ளன. வேத வழிபாட்டு நடைமுறைகள் பரவிய போதும் இயற்கைநெறி நிலையிலே மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் ஆழமாக இருந்ததையும் இந்நிலை நன்குணர்த்துகின்றது. மணமான மகளிரும், கன்னியரும் திருப்பரங்குன்றம் சென்று விசேட வழிபாடுகளைச் செய்தனர். அவ்வழிபாட்டின்போது யானை உண்டெஞ்சிய கவளத்தையுண்டனர். அதனால் காதலர் அன்பையும், கண்ணிறைந்த கணவரையும் அடையலாமென நம்பினர்.[30]

## வழிபாட்டில் இருநிலைப்பாடு:

தமிழர் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்த வழிபாட்டு நடைமுறைகளில் இருநிலைப்பாடு தோன்றியமையை பரிபாடல் நன்கு விளக்குகின்றது. இயற்கைநிலை, செயற்கைநிலையென அவற்றைக் கொள்ளினும் பொருந்தும். வாழுகின்ற நிலையிலேயே நடைமுறைப்படுத்தப்பட்ட வழிபாடு இயற்கை நிலையானது. பிற பண்பாட்டின் கலப்பினால் கேள்வி நிலையிலே வகுத்துக் கொண்ட வழிபாட்டு நடைமுறைகள் செயற்கை நிலையானவை. அனுபவத்துடன் இயைந்த இயற்கை வழிபாட்டு நடைமுறைகளுக்கும் அனுபவத்தோடு இயையாத செயற்கை வழிபாட்டுமுறைக்கும் வேறுபாடுகளும் காணப்பட்டன. அந்த வேறுபாடுகளைப் பரிபாடல் நன்கு சுட்டுகின்றது. வழிபாட்டு நடைமுறைகளிலே ஏற்பட்ட மாற்றங்களும் புதுமைப்பண்புகளும் செவ்வேள் திருமால் பற்றிய கடவுட் கோட்பாடுகளாக அமைந்தன.

புராணக்கதைகள் மனிதனது சிந்தனைப் போக்கிலே வளர்ச்சி ஏற்பட்டதைக் காட்டுகின்றன. தேவர், அசுரர், மனிதர் என்ற பாகுபாடு மக்களிடையே நிலவிய குண நிற வேறுபாடுகளை பாகுபாடு செய்து சிந்திக்க உதவியது. மனிதனது வாழ்க்கைநிலைக்கும் மேலான கடவுள்நிலையை அடைய வழிபாடு கருவியாக உதவும் என்ற நம்பிக்கை மக்கள் மனதிலே உருவாகத் தொடங்கியது. புராணக்கதைகள் இந்நம்பிக்கையை மேலும் பலப்படுத்தின. இதனால் செவ்வேள் திருமால் என்ற கடவுளர் மக்கள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றனர். தெய்வங்களிலே மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். தெய்வங்களின் பெருமையையும் ஆற்றலையும் பாடல்களிலே பாடினான். தான் மட்டுமன்றித் தனக்குப் பின்வருபவர்களும் அதை நம்ப வேண்டுமென எண்ணினான். திருமாலிருஞ் சோலையும் திருப்பரங்குன்றமும் சிறந்த வழிபாட்டுத்தலங்களாக இன்றும் புகழ்பெற இதுவே காரணமாகும். ''கடவுளரைப் பாடல்'' என்னும் புதிய மரபும் உருவாகியது. பிற்காலத்திலே பல புலவர்கள் கடவுளரைப் பாடவும் இது வழிகாட்டியது. ஆழ்வார்களும் நாயன்மாரும் இறைவன் வடிவையும் ஆற்றலையும் பல்வாறாக விரித்துப் பாடப் பரிபாடற் செய்யுட்கள் பெரிதும் உதவின.

> ''சூதென்று களவு சூதுஞ் செய்யாதே
> வேதம்முன் விரித்தான் விரும்பிய கோயில்
> மாதுறு மயில்சேர் மாலிருஞ் சோலை
> போதவிழ் மலையே புகுவது பொருளே.''[31]

என நம்மாழ்வார் பிற்காலத்திலே திருமாலிருஞ் சோலையைப் பாடுகின்றார்.

> ''விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
> ...............................................................
> நன்னிற மேகம் நின்றது போலப்
> பகையணங் காழியும் பால் வெண்சங்கமும்
> தகைபெறு தாமரைக் கையி னேந்தி
> நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
> பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய
> செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்''[32]

என இளங்கோவடிகள் திருமாலை வர்ணிப்பதற்கும் பரிபாடலே தரவுதந்தது. கம்பராமாயணத்திலே திருவவதாரப் படலத்திலே கம்பர் இவ்வர்ணனையை அடிப்படையாகக் கொண்டு,

> ''கருமுகில் தாமரைக் காடு பூத்துநீடு
> இருசுடர் இருபுறத்தேந்தி.........
> வருவ போல் கலுழன் மேல்வந்து தோன்றினான்''[33]

என்று கவி பாடுகின்றார். திருமாலின் உருவம் வழிபாட்டிற்குரிய சின்னமாக உருவெடுத்தபோது தமிழர் மனதிலே பரிபாடல் வர்ணனைகளே முன்னின்றிருக்கவேண்டும்.

செவ்வேள் பற்றிய பரிபாடல் கூறும் விபரங்களைப் பின்னோரும் கையாண்டுள்ளனர்.

''குறமகள் அவளெம குலமகள் அவளொடும்
அறுமுக வொருவநின் அடியிணை தொழுதேம்
துறைமிசை னினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமணம் எனவே''[34]

எனச் சிலப்பதிகாரத்தில் செவ்வேள் பெருமை கூறப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றத்தோடு மேலும் ஐந்து மலைப்பிரதேசங்களைச் செவ்வேள் விரும்பி உறையும் இடமாக திருமுருகாற்றுப்படை நெடும்பாட்டு வடிவில் நின்று கூறுகின்றது. இயற்கை நிலையிலே குன்றின் உருவிலே முருகனைக் கண்டவர் தமிழர். பரிபாடல் முருகனைச் செவ்வேளாக்கி உருவுந் தந்தது. திருமுருகாற்றுப்படை செவ்வேள் உறை குன்றங்களைச் சிறப்பித்தது. கச்சியப்பர் யாவற்றையும் தொகுத்துக் கந்தபுராணமாக விரித்துரைத்தார்.

கௌமாரம் வைஷ்ணம் என்ற சமயங்களாக செவ்வேள் பெருமையும், திருமால் பெருமையும் தனிப்படப் பேசப்பட்ட நிலையும் உண்டு. எனினும் பரிபாடலே இரு கடவுள்களைப்பற்றிய வழிபாட்டு நிலையான தகவல்களைத் தொகுத்துத் தந்த முதல் தமிழ்நூலாகும். செவ்வேள் மக்கள் நடைமுறை வாழ்வோடு நெருங்கிய தெய்வமாகவும் திருமால் மக்களின் எண்ணக் கருத்திலே உயர்நிலைபெற்ற தெய்வமாகவும் விளங்குகின்றனர். இன்றுவரை தமிழர் வழிபாட்டிலே இந்நிலையிலேயே செவ்வேளும் திருமாலும் இடம்பெற்றுள்ளனர். சிறப்பாக ஈழநாட்டிலே இருதெய்வங்களும் மக்கள் வாழ்க்கையில் இணைந்து வழிபாட்டு நடைமுறைகளிலும் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர். தமிழர் தெய்வங்களாகப் பரிபாடலிலே பேசப்பட்ட நிலையை இதனுல் நாம் தெளிவுற விளங்கிக் கொள்ளமுடிகின்றது. இதுவே சமயத்தின் தனிப்பெருஞ் சிறப்பெனத் தமிழர் கொண்டு வாழ்ந்தனர்.

## அடிக்குறிப்புகள்

1. Tamil Lexicon. Vol. VI. Part II. Madras, University of Madras, 1934.

2. தொல்காப்பியம்: அகத்திணையியல், சூத்: 56 சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1977.

3. தொல்காப்பியம்: செய்யுளியல் சூத்திரங்கள்: 425, 426, 427 சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1977.

4. பரிபாடல் மூலமும் உரையும்: அணிந்துரை. பக். 13. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம். 1975.

5. இறையனார் களவியல்: முதற்சூத்திர உரை பக். 6. கழகவெளியீடு, 1953.

6. தொல்காப்பியம்: இளம்பூரணம். கழகவெளியீடு.

7. புறநானூறு: செய்யுள் 182, சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1973.

8. திருவள்ளுவமாலை

9. பரிபாடல்: செய்யுள் 1, அடிகள் 10-13 பக். 3.

10. பரிபாடல்: செய்யுள் 1. அடிகள் 37-48 பக். 4.

11. திருவாய்மொழி: 1:7, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம். சென்னை. B. இரத்தினநாயகர் ஸன்ஸ், 1959.

12. Tamil Lexicon. Vol. III, part. I.

13. பரிபாடல்: செய்யுள் 2, அடிகள் 60–68 பக். 16.

13. நற்றிணை: செய்யுள் 322, அடிகள் 9-12 பக். 547. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1976.

14. பரிபாடல்: செய்யுள் 3, அடிகள் 27–29 பக். 29.

15. பரிபாடல்: செய்யுள் 4, பொருட்சுருக்கம் பக். 45.

16. நற்றிணை: செய்யுள் 32, பக். 57.

17. புறநானூறு: செய்யுள் 57, பக். 149. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1973.

18. *புறநானூறு:* செய்யுள் 291, அடிகள் 2-3, பக். 183.

19. *மதுரைக்காஞ்சி:* அடிகள் 590-591, பக். 18.

20. *பரிபாடல்:* செய்யுள் 15, பொருட்சுருக்கம், பக். 244.

21. *புறநானூறு:* செய்யுள் 299, பக். 541.

22. *குறுந்தொகை:* செய்யுள் 362, பக். 541. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1978.

23. *அகநானூறு:* செய்யுள் 118, பக். 420. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1979.

24. *அகநானூறு:* செய்யுள் 28, பக். 113.

25. *நற்றிணை:* செய்யுள் 82, பக். 142.

26. *பரிபாடல்:* செய்யுள் 5, பொருட்சுருக்கம், பக். 58.

27. *பரிபாடல்:* செய்யுள் 5, அடிகள் 79 - 81, பக். 62.

28. *பரிபாடல்:* செய்யுள் 8, அடிகள் 95 - 102 பக். 117 - 118.

29. *பரிபாடல்:* செய்யுள் 18, பொருட்சுருக்கம், பக். 282.

30. *பரிபாடல்:* செய்யுள் 19, அடிகள் 85 - 94, பக். 298.

31. *திருவாய்மொழி:* 2–10–10.

32. *சிலப்பதிகாரம்:* 11: 43 – 51 அடிகள், பக். 4. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1977.

33. *கம்பராமாயணம்:* திருவவதாரப்படலம்: 12, சென்னை, கம்பன் கழகம், 1976.

34. *சிலப்பதிகாரம்:* குன்றக்குரவை: 17, பக். 5.